[1997 மார்ச் 15

211—

கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுதல்

***1097—திரு. செ. இராமலிங்கம்,**

திரு. குத்தாலம் பி. கல்யாணம்,

திரு. கே. சி. கணேசன்:

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம், நீலத்தநல்லூர்-பெரம்பலூர்-திருவள்ளுவர் மாவட்டம் மதனத்தூர் இடையே போக்குவரத்து வசதிக்காக கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், மதிப்பீடு எவ்வளவு?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): இல்லை.

முற்பகல் 10-05

திரு. செ. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணம், நிலத்தநல்லூர் இணைப்புப் பாலத்திற்காக, கொள்ளிடத்தின் குறுக்கே கட்டப்படவேண்டிய அந்தப் பாலம் குறித்து, சென்ற ஆண்டு இதே வினாவை நான் எழுப்பியிருந்தேன். அப்போது துறையிடமிருந்து எனக்கு வந்த பதிலில், கொள்ளிடம் ஆற்றின் நீர் வழிப் பாதை 1080 மீட்டர் மட்டுமே உள்ளது; அதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ. 28 கோடி என கூறப்பட்டிருந்தது. அந்தப் பாலம் கட்டுகிற பணி, மத்திய சாலை தொகுப்புத் திட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ளப்படும் எனவும் அறிவிக்கப்பட்டிருந்தது. எனவே, மீண்டும் பரிசீலனை செய்து, இந்த ஆண்டே அந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதனுடைய நீளம் 1080 மீட்டர் மட்டுமே என்பதைவிட, 1080 மீட்டர் என்பது அதிகமான நீளம் ஆகும். அதற்கான செலவு கிட்டத்தட்ட 40 கோடி ரூபாய் ஆகிறது. அதற்கான சாலைகளையும்,

1997 மார்ச் 15]

பாதைகளையும் போட வேண்டியிருக்கிறது. நிதிநிலையைப் பொறுத்தவரையில் 40 கோடி ரூபாய் என்பது, அதுவும் ஒரே திட்டத்திற்கு ஒதுக்குவது என்பது இப்போது இயலாத காரணத்தினால், அதனை இப்போது இந்த அரசு பரிசீலனையில் எடுத்துக் கொள்ளவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. குத்தாலம் பி. கல்யாணம்.

திரு. குத்தாலம் பி. கல்யாணம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி, தஞ்சை என்று இருந்தாலும்கூட, சோழ மண்டலத்தை இணைக்கிற பாலம் என்கிற வகையிலேயும், பிரசித்தி பெற்ற கால்நடைச் சந்தை, நீலத்தநல்லூரில், கொள்ளிடம் ஆற்றின் கரையோரத்திலேதான் நடைபெறுகிறது என்பதாலும், சிறப்பாக, நம்முடைய, மக்கள் தலைவர் திரு. மூப்பனார் அவர்களுடைய சொந்தத் தொகுதியிலே அமைகிற பாலம் என்கிற வகையிலேயும், இதற்கு முன்னுரிமை அளித்து, அரசு கட்டித்தர முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாலத்தின் முக்கியத்துவத்தை அரசு உணர்ந்திருக்கிறது. இந்தப் பாலத்தைக் கட்டுவதன் மூலம், விருத்தாசலத்திற்கு கும்பகோணத்திலிருந்து வருவதற்கு 20 கிலோ மீட்டர் தூரம் குறையும். இருப்பினும், நிதிநிலைமையைப் பொறுத்து வருங்காலங்களில் அரசு இதைப் பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. சி. கணேசன்.

திரு. கே. சி. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கொள்ளிட பாலம், கும்பகோணம் தொகுதியையும், ஜெயங்கொண்டம் தொகுதியையும் இணைக்கிற பாலம். சென்னைக்கு வருவதற்கு 20 கிலோ மீட்டர் குறைவது மட்டுமல்ல; பெரம்பலூரிலிருந்து அரியலூர் வழியாக கும்பகோணம் செல்வதற்கும் 30 கிலோ மீட்டர் தூரம் குறைகிறது. இரண்டாவது, என்னுடைய தொகுதியானது, தாழ்த்தப்பட்டவர்கள், பிற்படுத்தப்பட்டவர்கள் அதிகம் வசிக்கிற பகுதி. அந்தப் பகுதி மாணவர்கள் கல்லூரியில் படிப்பதற்கு கும்பகோணத்திற்குதான் செல்ல வேண்டும், ஆடவராக இருந்தாலும், பெண்களாக இருந்தாலும். அதைப்போல விவசாயக் கூலித் தொழிலாளர்களும், கும்பகோணம் செல்வதற்கு, இந்தப் பாலத்தைக் கட்டினால்தான் சுலபமாகச் செல்ல முடியும். இல்லையென்றால்,

50 கிலோ மீட்டர் தூரம் சுற்றித்தான் படிப்பவர்களும், வேலைக்குச் செல்பவர்களும் செல்ல வேண்டியிருக்கிறது. மேலும், புதிய மாவட்டமாக, பெரம்பலூர் — திருவள்ளுவர் மாவட்டம் உதித்திருக்கிற காரணத்தினால், இதைக் கருத்தில் கொண்டு, குடந்தை-பொம்பலூர் செல்ல அந்தப் பாலத்தை உடனடியாகக் கட்டித்தர அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 3 சட்டமன்ற உறுப்பினர்களும் இந்த ஒரே வினாவைக் கேட்டிருப்பதிலிருந்து, இதன் முக்கியத்துவம் புரிகிறது. ஆகவே, வருங்காலங்களில் நிதிநிலைமைகளைப் பொறுத்து, இந்த அரசு இதைப் பரிசீலிக்கும்.

திரு. செ. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் உங்களைத்தான் கூப்பிடப் போகிறேன், கேளுங்கள்.

திரு. செ. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது கும்பகோணத்திலிருந்து சென்னைக்கு வருகிறபோது, அணைக்கரை பாலம் வழியாகத்தான் வரவேண்டும், அந்தப் பாலம் கட்டி 100 ஆண்டுகளுக்கு மேலாகிறது. அந்தப் பாலம் இடியும் தருவாயில் உள்ளது. எனவே, நாங்கள் இங்கே கேட்டிருக்கிற இந்தப் பாலம்தான் அதற்கு மாற்றுவழி. எனவே, அதற்கான அவசியத்தைக் கவனத்தில் கொண்டு, சற்று விரைவுபடுத்தி, அரசு அதனைக் கட்ட ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரும்பத் திரும்ப அதே பதிலைத்தான் நான் சொல்ல வேண்டியிருக்கிறது. 40 கோடி ரூபாய் இதற்குச் செலவாகும். 40 கோடி ரூபாயை ஒரே பாலத்திற்குச் செலவு செய்ய, இந்த ஆண்டிலேயே அதை எடுத்துக் கொள்ள முடியாது. வருங்காலங்களில் இதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளும். இப்போது வேண்டுமானால் B.O.T. போன்ற தனியார் முறைகளின் மூலமாக—அதிலேயும் பல சிக்கல்கள் எல்லாம் இருக்கின்றன; அந்தச் சிக்கல்கள் எல்லாம் தீர்க்கப்படுமானால், தனியார் மூலமாக—அந்தப் பாலத்தைக் கட்டக்கூடிய முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர்கள், சோழ நாடு என்று சொல்லி, முதலமைச்சர் அவர்கள் மூலமாக அதனைப் பெற முயற்சி செய்கிறார்கள்: